நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதுபற்றி தீர விசாரித்து ஒரு நல்ல முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங்களிலே சென்று வேலை செய்பவர்கள், பீடி சுற்றுபவர்கள் என்று ஒரு பகுதியினர். இன்னொரு பகுதியினர் புகையிலையைத் தங்கள் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று பீடி சுற்றுபவர்கள் ஒரு பகுதியினர். இல்லங்களிலே புகையிலையை எடுத்துச் சென்று பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களில் ஆண்கள், இருக்கிறார்கள்; பெண்கள் இருக்கிறார்கள்; சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு படிவங்கள்—விடுப்புப் படிவங்கள், ஊதியத்தைக் குறிக்கின்ற படிவங்கள்—எல்லாம் வைத்துக்கொள்ள தேவையில்லை என்று முன்னால் விதிவிலக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் ஆங்காங்கே தெரிவிக்கப் பட்ட கருத்துக்களை மையமாக வைத்து, விதிவிலக்கு வழங்கக்கூடாது; விதிவிலக்கு வழங்கியிருந்தாலும் அது ரத்து செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சம்பந்தப் பட்டவர்களுக்கு அரசின் சார்பில் அறிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. விதிவிலக்குகள் ரத்து செய்யப்படாமல் இருக்குமானால் அப்படிப்பட்ட நிலைமைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுதல்.

200—(* வினா எண். 3413) **திரு. வ. முல்லைவேந்தன்** : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1989 மே 4]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிக்கும், பேரூராட்சிக்கும்' நிறைந்த வேறுபாடுகள் இல்லை. ஆதி திராவிடர்கள் மிகவும் வறுமையில் வாடுகிறவர்கள். பேரூராட்சியில் வாழ்கிற ஆதி திராவிடர்களுக்கு இந்த அரசு எதிர்காலத்திலாவது காலனி வீடுகளைக் கட்டித் தர முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் இவைகளின் கீழ் ஊராட்சிப் பகுதி களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாசி மக்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கிற திட்டம் இருந்தது. பேரூராட்சிப் பகுதிகளில் கட்டக்கூடாது என்று மத்திய அரசு தெரி வித்திருந்தது. ஆனாலும் நம்முடைய மாநில அரசு இப்போது பொறுப்பேற்றுக் கொண்டவுடன் 1989-90 ஆம் ஆண்டில் 25 சதவீதம் பேரூராட்சிப் பகுதிகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்தது.

இதற்கிடையில் என்.ஆர்.இ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. ஆகிய இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து மத்திய அரசு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரால் ஒருங் கிணைத்து இருக்கிறார்கள். அதிலே கிராமப்புறங்களில் மட்டும்தான் இப்படிப்பட்ட வேலைகள் எடுத்துக்கொள்ளப் பட வேண்டும். பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இருப்பினும் நம்முடைய மாநில அரசு பேரூராட்சிப் பகுதிகளிலும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் வீடுகள் கட்டித் தருவது பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

[1989 மே 4

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு முடிவெடுக்கிற வரையில் உள்ள இடைக் காலத்திலே கடன் வழங்கியாவது வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில் நகர்ப்புற கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலமாக நலிவுற்றவர்களுக்கும், குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கும் கடன் கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிகொண்டான் ஆற்றில் பெட் டேம் கட்டுதல்.

201—(* வினா எண். 555) திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் வட்டம், பிலாவடி, புளியஞ்சேரி, விக்ரபாண்டியம் கிராமங்கள் பாசனம் பெறும் பிலாவடி வாய்க்கால் தலைப்பில் முடிகொண்டான் ஆற்றில் பெட் டேம் (Bed dam) கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

(இ) மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) பெட் டேம் கட்டும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியத்தில் பிலாவடி, மேலராமன்சேட்டி, புளியஞ்சேரி, விக்கிரபாண்டிபுரம், மேலப்பிடாகை ஆகிய